B, விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்ததன் பின்னர், நீர் இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள்.

B1. தங்களது விண்ணப்பத்தின் அடிப்படையில், சபையினால் உங்களுக்கு மதிப்பீட்டுடன் கூடிய கொடுப்பனவுப் பத்திரம், நீர் இணைப்பு வழங்கும் போது வீதிக்கு ஏற்படும் சேதங்கள் சம்பந்தமான விபரங்கள் உள்ளடங்கிய பத்திரம் மற்றும் நீர் இணைப்பு பெறும் போது சபையுடன் செய்துகொள்ள வேண்டிய ஒப்பந்த ஆவணமும் வழங்கப்படும்.

1. வீதியை சேதப்படுத்துவது சம்பந்தமான விபரங்களை உள்ளடக்கிய பத்திரத்தை உரிய வீதி பராமரிப்பு நிறுவனத்திற்கு சமர்ப்பித்து வீதிக்கு ஏற்படத்தக்க சேதத்திற்காக செலுத்தப்பட வேண்டிய தொகையை முதலில் குறித்த நிறுவனத்திற்கு செலுத்தியதன் பின்னர் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய மதிப்பீட்டுத் தொகையை செலுத்தவும். மேற்கண்ட கொடுப்பனவை செலுத்தியதன் பின்னர் உரிய கொடுப்பனவு பற்றுச்சீட்டினை மற்றும் வீதியை சேதப்படுத்துவதற்காக வீதி பராமரிப்பு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை சபையின் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2. நீர் இணைப்பினைப் பெறுவதற்காக சபைக்கு செலுத்தப்பட வேண்டிய பணத்தொகையை வவுச்சரில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய இடத்திலேயே செலுத்த வேண்டும்.

B2. நீர் இணைப்பினை பெற்றுக்கொள்ளும் போது சபையுடன் செய்யப்படும் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு உரிய பாவனையாளர் வராவிடில், சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டுஇரண்டு சாட்சியாளர்களின் முன்னிலையில் கையொப்பமிட்டு சபையின் உரிய அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

B3. நீர் இணைப்பு பெறும் போது மீளச் செலுத்தப்படும் வைப்புத் தொகையை செலுத்த வேண்டும். (இப்பணத்தொகை விண்ணப்பதாரருக்கு குறித்த நீரிணைப்பு தேவையற்ற போது நீர் விநியோகத்தை பிரதான குழாயில் இருந்து துண்டித்து பின்னர் உரிய கணக்கினை செல்லுபடியற்றதாக்கி மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும்).

B4. நீர் இணைப்பு வளாகத்திற்கான நுழைவு பாதையின் ஊடாக மற்றும் வளாகத்தின் நுழைவு ஆரம்பிக்கும் இடத்தின் வழியாக மட்டுமே வழங்கப்படுகின்றது. (உதாரணமாக – பிரதான நுழைவாயில்) வேறு ஒரு காணியின் அல்லது வீதியின் அல்லது இடத்தின் ஊடாக வழங்கப்பட மாட்டாது.

B5. பொதுவாக வீட்டு நீர் இணைப்புகள் ½ அங்குல (மி.மீ. 20) விட்டமுள்ள குழாயின் மூலம் வழங்கப்படுகின்றன. விண்ணப்பதாரரின் கோரிக்கை, பயன்பாட்டு முறை மற்றும் தொழில்நுட்பத் திறனின் அடிப்படையில் ¾ அங்குல (மி.மீ. 25) விட்டமுள்ள குழாயின் மூலம் நீர் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும். நீர்மானியை பொருத்துவதற்கு தேவையான தூண் தங்களினால் நிர்மாணிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லையாயின், அதனை மதிப்பீட்டில் சேர்க்க முடியும். இதற்கான அறிவுறுத்தல்களானது உரிய அலுவலகத்தினால் வழங்கப்படும்.

B6. மதிப்பீட்டுத் தொகையை ஒரே தடவையில் செலுத்த முடியாதவிடத்து தவணை அடிப்படையில் செலுத்தக்கூடிய வசதி காணப்படுவதுடன், வாடகைக்கு அல்லது குத்தகைக்கு குடியிருப்பவர்களுக்கு மதிப்பீட்டுத் தொகையை தவணை அடிப்படையில் செலுத்துவதற்கான உரித்து கிடைக்கப்பெற மாட்டாது. தவணை ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய தவணை வட்டியும் பொருந்தும்.

B7. சபையினால் நீர் வழங்கப்படுவது நீர் மானி வரை மாத்திரமாகும். வளாகத்தினுள் நீர் விநியோக அமைப்பினை விண்ணப்பதாரர் முறையாக நிர்மாணித்துக்கொள்ள வேண்டும். சபையின் நீர் விநியோக அமைப்பின் முறையான செயல்பாட்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் அல்லது பழுதுபார்க்கும் பணிகளுக்காகவோ அல்லது அத்தியாவசியம் எனக் கண்டறியப்படும் வேறு ஏதேனும் நடவடிக்கைகளுக்காகவோ நீர் விநியோகத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான தேவை சபைக்கு ஏற்படுவதனால், அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது தனது நாளாந்த பாவனைக்கு சமமான நீரை அன்றாடம் சேகரித்து வைக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகளை விண்ணப்பதாரர் மேற்கொள்ள வேண்டும்.

B8. இது தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் சிக்கல் காணப்படின், பற்றுச்சீட்டில் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

சுத்தமான குடிநீரை மிகச் சிக்கனமாக பயன்படுத்துமாறும், மற்றவர்களுக்கும் அருந்துவதற்காக சுத்தமான குடிநீர் வசதியை வழங்குவதற்கு உதவுமாறும் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.